# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## MCOP.No.55/2016

Deposition of PW2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 18.10.2023.

Evidence Recorded Time: 01.26 P.M to 1.35 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | செந்தில்குமார் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | மாரிமுத்து | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:-**

நான் மேல்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். எனக்கு சொந்தமான வாகனத்தின் எண் என்ன என்றால் வண்டி எண் நினைவில்லை, டாடா ஏசி வாகனம் ஆகும். வண்டி வாடகை எவ்வாறு பேசப்படும் என்றால் பொருட்களை ஏற்றிக்கொண்டு, இறக்கிவிட்டு பின்பு பொருட்களை ஏற்றி சென்ற டிரேக்களை மீண்டும் ஏற்றி சென்ற இடத்தில் கொண்ட வந்து இறக்கவேண்டும் என்று பேசப்படும். அந்த டிரேக்களை இறக்கியபின்புதான் வாடகை கொடுக்கப்படும் என்றால் சரிதான். மாம்பழம் ஏற்றிச் செல்லும் போது டிரைவருடன் யார் செல்வார்கள் என்றால் மாம்பழங்களின் உரிமையாளர் உடன் பாதுகாப்பிற்காக செல்வார். மனுதாரர் லட்சுமணன் எவ்வாறு வாடகை பேசி என்னிடம் வண்டியை எடுத்து சென்றார் என்றால் மாம்பழங்களை ஏற்றி இறக்கிவிட்டு, காலி டிரேக்களை இறக்கியபிறகு வாடகை கொடுப்பதாக பேசி வண்டியை எடுத்து சென்றார். லட்சுமணன் மாம்பழங்களை ஏற்றி சென்ற பிறகு என்ன நடைபெற்றது என்றால் மாம்பழங்களை ஏற்றி சென்று இறக்கிவிட்டு திரும்பி வரும் போது எதிரே வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு விட்டடது. திரும்பி வரும் போது எத்தனை பேர் வந்தார்கள் என்றால் டிரைவரும், மாம்பழம் ஏற்றி சென்ற உரிமையாளர்

லட்சுமணனும் வந்தார்கள். மனுதாரர் தனக்கு சொந்தமான காலி டிரேக்களுடன் வந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். மனுதாரர் என் வாகனத்தின் பாலிசியை பொறுத்த வரை மூன்றாம் நபர் என்றாலும், அவரை ஏற்றி வந்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது வாகனம் மூன்றாம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் லட்சுமணன் மாம்பழத்தின் உரிமையாளர் என்ற முறையில் தான் வண்டியில் வந்தார் என்றாலும், நான் பாலிசி விதிகளை மீறியுள்ளதாக சொல்கிறார்கள் என்றால் அது தவறாகும். எனது வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான்.

<u>3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u> வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் மதிய உணவு இடைவேளைக்கு பிறகு ஒத்திவைக்கப்படுகிறது.

Evidence Recorded Time: 04.16 P.M to 04.30 P.M

<u>3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் அழைப்பாணை பெற்றுக்கொண்டு வழக்கறிஞர் மூலம் ஆஜரான பிறகு இந்த வழக்கில் சம்மனை பெற்று சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் ஒருதலைபட்சமான பின்பு இந்த மனுவில் சம்மன் வாங்கி கொண்டு சாட்சியம் அளிப்பது சட்டப்படி முரணானது என்றால் சரியல்ல. மனுதாரர் சம்பவத்தன்று எவ்வளவு வாடகை கொடுத்தார் என்றால் சம்பவத்தன்று வாடகை கொடுக்கவில்லை. எனது வாகனத்தை ஓட்டியது பிரகாஷ் என்றால் சரிதான். சம்பவத்தின் போது ஓட்டுநர் பிரகாஷ் எவ்வளவு மாம்பழம் லோடு ஏற்றினார் என்றும், எவ்வளவு வாடகை பேசினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாகனத்தின் ஓனர் என்ற முறையில் வாடகையை நான் பேசுவேனா என்றால் ஓட்டுநர் தான் பேசுவார். சரக்கை எங்கு கொண்டு இறக்கவேண்டுமோ, அங்கு கொண்டுதான் இறக்குவோம். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஓட்டுநர் பிரகாஷிற்கு தெரியும் என்றால் அவர் சொல்லி எனக்கு தெரியும். சம்பவத்தின் போது நான் இல்லாத காரணத்தினால் எனக்கு முழு விவரமும் தெரியாது என்றால் ஓட்டுநர் சொல்லி தெரியும். மாம்பழங்களை

மூட்டையாக கட்டினார்களா அல்லது வண்டியில் அப்படியே கொட்டினார்களா அல்லது டிரே வைத்து கொண்டுபோனார்களா என்றால் டிரேவில் வைத்து கொண்டு போனதாக ஓட்டுநர் சொன்னார். மனுதாரர் மனுவில் காலியான டிரேவுடன் வந்ததாக எந்த இடத்திலும் சொல்லாத நிலையில் நான் மனுதாரர் காலியான டிரேவுடன் தான் வந்தார் என்று சொல்வது மனுதாரரின் சாட்சியத்திற்கு முரணாக உள்ளதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையிலும், வாக்குமூலத்திலும் மனுதாரர் காலியான டிரேவுடன் வந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. இந்த மனுவில் நான் ஒருதலைபட்சம் ஆக்கபட்ட பின்னர் சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**6-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

ஒம்/-PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.